(8) அறிவிப்பு

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 21-3-1978 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவுப்படி பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்:—

23—3—1978 வியாழக்கிழமை. .. ஏற்கனவே அறிவிக்கப்பெற்றுள்ளவாறு நடைபெறும்.

24—3—1978 வெள்ளிக்கிழமை. .. தூய வெள்ளிக் கிழமை—விடுமுறை

25—3—1978 சனிக்கிழமை. .. கேள்வி நேரம் இல்லை.

மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்

12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

7. மாநில சட்ட மன்றம்.

8. தேர்தல்கள்.

9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்.

தேவையிருப்பின், பேரவை மாலையிலும் கூடும்.

26—3—1978 ஞாயிற்றுக்கிழமை. .. விடுமுறை.

27—3—1978 திங்கட்கிழமை. .. ஏற்கனவே அறிவிக்கப்பெற்றுள்ளவாறு நடைபெறும்.

28—3—1978 செவ்வாய்க்கிழமை. ..

29—3—1978 புதன்கிழமை. .. 1. நிதி ஒதுக்க சட்டமுன்வடிவுகள் மீது விவாதமும் அவற்றை நிறைவேற்றலும்.

2. மற்ற அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வும் நிறைவேற்றலும்.

1978 மார்ச் 22]

30—3—1978 வியாழக்கிழமை.	..	அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வும்நிறைவேற்றலும், மற்றும்அரசினர் அலுவல்கள் ஏதேனும் இருப்பின்.
31—3—1978 வெள்ளிக்கிழமை.	..	
1—4—1978 சனிக்கிழமை.	..	
2—4—1978 ஞாயிற்றுக்கிழமை.	..	விடுமுறை.
3—4—1978 திங்கட்கிழமை.	..	அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வும், நிறைவேற்றலும் மற்றும் அரசினர் அலுவல்கள் ஏதேனும் இருப்பின்.
4—4—1978 செவ்வாய்க்கிழமை.	..	
5—4—1978 புதன்கிழமை.	..	மாண்புமிகு நீதிபதி திரு. இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கையின் மீது விவாதம்.

பேரவை வழக்கம் போல் காலை 9 மணி முதல் கூடும்.

இம்மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நாளையும் தொடரும். பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.35 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(9) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

317. வேளாண்மைத் துறையில் 2-3-1972 ஆம் தேதியன்று வெளியாகி, 26-4-1972 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II, பிரிவு 1, பக்கங்கள் 452-454-ல் (ஆங்கிலத்தில்) வெளியான II-1-1872/1972 ஆம் எண் அறிவிப்பில் (இது பின்னர் திருத்தப்பெற்றுள்ளது) திருத்தமொன்று செய்வது குறித்து, வேளாண்மைத் துறையின் 3-2-1978 ஆம் தேதியிடப்பெற்ற 166 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959] 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

318. சிம்லாவில் உள்ள இந்திய நிதித் துறையின் (மத்திய வருவாய்) 5-5-1925-ஆம் தேதியிடப்பெற்ற C-63, முத்திரைத் தாள்/25 ஆம் எண் அறிவிப்பில் வெளியானதும், தமிழ்நாட்டில்